***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 67/2025 – P.W. 4 (LW5)***

| | |
|---|---|
| *Name* | மனோசித்ரா - அலுவலக உதவியாளர்<br>சார்பு நீதிமன்றம், திருவாரூர் |
| *Father/Husband's Name* | க/பெ. லோகநாதன் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 35 |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 25.04.2024 ம் தேதியன்று மதியம் 01.30 மணியளவில் நான் நீதிமன்ற அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது மன்னார்குடி நகர போலீசார் 22.04.2024 ம் தேதியன்று இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவர் நீதிமன்ற ஊழியர்களிடம் தவறாக பேசி தகராறு செய்தது தொடர்பாக சம்பவ இடமான மன்னார்குடி நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் என் முன்னிலையிலும், இளநிலை உதவியாளர் செல்வமணி என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக நானும், இளநிலை உதவியாளர் செல்வமணி என்பவரும் கையொப்பம் செய்தோம்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

25.04.2024 ம் தேதியன்று மதியம் 01.30 மணிக்கு போலீசார் என்னை விசாரித்ததாக சொல்லும் நேரத்தில் நான் பணியில் இருந்தேன். என்னை விசாரிப்பதற்கு காவல் துறையினர் அழைப்பாணை எதுவும் வழங்கவில்லை. வரைபடம் வரைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்காக மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் கையெழுத்து வாங்கி கொண்டார்களா என்றால் இல்லை நீதிமன்றத்தில்.

பார்வை மகசரில் உள்ள எனது கையொப்பத்தின் கீழ் 20.04.2024 ம் தேதியன்று முதலில் தேதி குறிப்பிடப்பட்டு பின் 25.04.2024 ம் தேதியன்று திருத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. காவல் நிலையத்தில் வைத்து ஜோடித்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi